# யாழ்நாதம்

இதழ் 16

2010



புகழ் பூத்த மாணவி சிவகாமியின்
சேவை நலன் பாராட்டும்
இணைப்பிதழ் இத்துடன்.......



வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனித நேயர்
திரு. வி. கயிலாசபிள்ளை
(குறிப்பு - பக்கங்கள் 5-9)



யாழ் நாதம் இதழ் 15
வெளியீட்டின் போது. . .

எமது கல்லூரியின் பழைய
சிரேஷ்ட மாணவியும் சிறந்த நூல்
ஆசிரியரும்
சமயச் சொற்பொழிவாளரும் ஆகிய
திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு
(குறிப்பு – பக்கம் 10)





திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களின் பிரியாவிடை நிகழ்வின் நிழல்
(குறிப்பு - பக்கம் 35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."
"It ought to be beautiful, I live here."

# யாழ் நாதம்

இதழ் 16 2010

உள்ளே: . . . .


| | |
|---|---|
| அறிவுரை மற்றும் பாராட்டு மலராக . . . . . . . | 02 |
| தலைவியின் செய்தி . . . . . . . | 03 |
| V. Kailasapillai - Tribute 'Manitha Neyar' Cum Financial Wizard | 05 |
| பாராட்டுகிறோம். . . . . . . . | 10 |
| பெண்களின் உரிமைகள் . . . . . | 11 |
| Eras Mentioned in Hinduism . . . . . | 13 |
| வள்ளுவத்தில் மருந்து. . . . . . . | 16 |
| குடலெரிவிற்கான உணவுகளும் கை மருந்துகளும் . . | 19 |
| பாற்கடல் திருமகளின் திருமணம் . . . . . | 21 |
| ஆலயத்தில் செய்யத் தகாதவைகள் . . . . . | 24 |
| உங்கள் கவனத்திற்கு,. . . . . . . | 26 |
| 2009ஆம் ஆண்டுக்கான மாகாண மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவிகள் விபரம் . . . . . . . . . | 28 |
| உறவுகள் மேம்பட உள்ளத்திற்கு பத்துக் கட்டளைகள் . . | 30 |
| யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு பதினாறாம் ஆண்டு (2009) அறிக்கை . . . . . | 31 |



வெளியீடு:-

'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுரை மற்றும் பாராட்டு மலராக . . .

இவ்விதழில் சில அரிய மனிதநேய வாழ்வியலுக்கான அறிவுரைகளை அங்கத்தவர்கள் தந்துள்ளார்கள். அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது சங்கத்துக்கு பல வழிகளிலும் உதவி புரிந்து ஆலோசனைகள் வழங்கிவருபவருமான திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களுக்கு அவரின் மனிதநேய செயற்பாடுகளுக்காக அகில இலங்கை இந்து மாமன்றத்தால் "மனித நேயர்" என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்ததை பாராட்டும் வகையில் அவரைப் பற்றி திரு. க. நீலகண்டன் எழுதி "டெயிலி நியூஸ்" பத்திரிகையில் பிரசுரித்த கட்டுரை இந்த இதழில் வருவதில் நாங்கள் பெருமையடைகின்றோம்.

அடுத்து எமது கல்லூரியின் சிரேஸ்ட மாணவியும் எழுத்தாளராக விளங்குபவருமான திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களை பாராட்டும் வகையில் அவரைப் பற்றிய சில தகவல்களையும் அவர் எழுதிய நூலில் இருந்து ஒரு கட்டுரையையும் பிரசுரிப்பதில் சங்கம் தனக்கு பெருமை சேர்த்துள்ளது.

மனிதநேயம் மிக்க உள்ளங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கின்றோம் நாட்டில் நடந்த அனர்த்தங்களால் பெற்றோரை இழந்தும் மற்றும் புனர்வாழ்வு பெற்று வரும் எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக எங்கள் பாடசாலையின் விடுதியை புனர்நிர்மானம் செய்து அவர்களை தங்க வைத்து படிப்பதக்கு உதவி செய்யும் வகையில் நிதியுதவி தந்தோ அல்லது நிதி சேர்ப்பதக்கான ஆலோசனைகள் தந்து அதற்கு எமக்கு தோளோடு தோளாக நின்று உதவி புரியமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். உதவி செய்ய விரும்புவோர் கீழ்கண்ட முகவரிகயில் தொடர்பு கொள்ளவும்.

உபதலைவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், 24 டீல் பிளேஸ் A, கொழும்பு 3 தொலைபேசி இல:- 011- 2575566 Email: suguash@eureka.lk

யாழ் நாதம் இதழ்களை அழகுற அமைத்து ஆண்டுதோறும் வெளியிட உதவிவரும் யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

*61/2, Abdul Gaffoor Mawatha*
*Colombo 3*

*திருமதி விமலா மணிவாசகன்*
*மலர் ஆசிரியை*

*Hot Mail vimalamani@live.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவியின் செய்தி

யாழ் நாதம் 16வது இதழ் மலர்கிறது. யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு, இதனை ஒரு சாதனையாக கருதுகிறது. இந்த சஞ்சிகையைப் பல ஆண்டு காலமாக சிறப்புற வெளியிட்டு வந்த ஆசிரியை திருமதி. சிவகாமி அம்பலவாணர் இப்பொழுது புலம் பெயர்ந்துவிட்டார். அவரது சேவைக்கு எமது நன்றிக் கடனாக இவ்வருட சஞ்சிகையுடன் அன்னாரின் திறமைகளையும், சேவைகளையும் சங்கத்திற்கு ஆற்றிய பணிகள் பற்றியும் தெரிவிக்கும் வகையில் இணைப்பிதழ் இத்துடன் வெளியிடப்படுவது மகிழ்சிசிக்குரியது. சிவகாமி விட்ட பணியை அவரது சகோதரி திருமதி. விமலா மணிவாசகன் தொடர்வது எமக்கு ஆறுதலாக உள்ளது.

பெரும் பிரச்சினைகளுக்கு மத்தியில் கடந்த மூன்று தசாப்தங்களாக எமது கல்லூரி சளைக்காமல் சவால்களை எதிர்நோக்கிக் கல்விப் பணியைத் தொடர்ந்து சாதனை படைத்துள்ளது. இக்காலப் பகுதியில் பல வேறு பாரிய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டி, சங்கம் நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்கியது. முன்னாள் கல்லூரி அதிபர் திருமதி. சரஸ்வதி ஜெயராஜா அவர்களும் தற்போதைய அதிபர் திருமதி. வேதநாயகி பேரின்பநாதன் அவர்களும் அவ்வப்போது முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்ற சங்கம் தன்னால் இயன்ற முயற்சி எடுத்தது. ஆனால் சமீப காலங்களில் நாட்டின் நிலைமை பாரதூரமாக இருந்தமையால் தேவையான நிதி திரட்டல் நடவடிக்கையில் எம்மால் ஈடுபட முடியவில்லை. இக் காரணத்தினால் புதிதாக பெரும் உதவி தேவைப்படும் காரியம் எதனையும் எம்மால் செய்ய இயலவில்லை.

எமது சங்கத்தின் தூணாக விளங்கும் எமது உபதலைவி திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை, எமது பாடசாலை மாணவிகள் என்று தன் சேவையை மட்டுப்படுத்தாது, பாதிக்கப்பட்ட வடக்கு மாணவர்கள் பலருக்கும் பாரிய சேவைகளை வழங்கும் பொறுப்பை ஏற்றதால் எமக்காக அவரால் அதிக நேரத்தைச் செலவிடமுடியாத நிலை ஏற்பட்டதும் தேக்கமான ஒரு நிலைக்கு வழியமைத்தது. எனினும் வருடந்தோறும் பாடசாலைக்கு செய்யும் பணிகளைத் தொடர்ந்து செய்தோம். அவை ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இனி வரும் காலத்தில் கூடுதலான சேவையை வழங்க உத்தேசித்துள்ளோம்.

மன்றத்தின் செயற்குழுவைப் பொறுத்தவரை, ஒரு சில உற்சாகமான உறுப்பினர்கள், வெளிநாடு சென்று விட்டதால் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. புதிதாக அங்கத்தவர்கள் சேராதிருப்பது ஒரு பெரும் குறையாகும். இந்த சஞ்சிகையை வாசிக்கும் பழைய மாணவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்துவம் பெற்றுத் தமது கல்லூரிக்குப் பணிபுரிய ஆர்வமுடன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். விண்ணப்ப படிவங்களை செயலாளர், யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், 24 டீல் பிளேஸ் A, கொழும்பு 3 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல:- 011- 2575566

நாம் தொடர்ந்து சில ஆண்டுகளாக சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பாக கொண்டாடி வருகிறோம் இம் முறையும் எமது புகழ் பூத்த மாணவிகள் இருவரை இத்தினத்தில் கௌரவிக்கின்றோம். இவர்கள் எழுத்தாளர்களாகப் புகழ் பெற்ற கல்விமான்கள். (1) தமது எழுத்துத்திறன் வாயிலாக நூல்கள் எழுதி சமயமும் தமிழும் வளர்க்கும் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு (2) ஆங்கில மொழித்திறனும், தமிழ்மொழி ஆற்றலும் உள்ளவராக ஆங்கில பத்திரிகைகளில் இந்து சமய விளக்கங்களையும் யாழ் மண்ணின் சிறப்பையும் வெளிக்கொணரும் திருமதி. திலகவதி விஜயரட்னம் ஆகிய இருவரும் சிரேஷ்ட மாணவிகளாக இருந்த காலத்தில் நானும் கால்லூரியில் கல்வி கற்றேன். இந்த இருவருக்கும் சங்க அங்கத்தினர்களின் சார்பில் பாராட்டைத் தெரிவிப்பதுடன், அவர்கள் நீண்ட நாட்கள் வாழ்ந்து தம் பணிகளைத் தொடரப் பிராத்க்கின்றேன்.

மன்றப் பணிகளை சீராகச் செய்வதற்கு ஒரு துடிப்புள்ள இளம் பெண்ணாக, செயலாளராகச் செயற்படும் திருமதி. கௌரி ரமணா எனக்கு வலது கை போன்று எல்லாக் காரியங்களிலும் உதவியுள்ளார். அவர் போன்று இளம் பெண்கள் பலர் எம்முடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பது எனது அவாவாகும். தார்மீக ரீதியாகவும், பணிகளில் எனக்கு பக்க பலமாகவும் இருந்து வரும் உபதலைவிகள் திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி. தயாநிதி செல்வநாயகம், திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தன் ஆகியோருக்கும், பொருளாளர் செல்வி. சிவமலர் சுப்பிரமணியத்திற்கும் யாழ்நாதம் சஞ்சிகை ஆசிரியர் திருமதி. விமலா மணிவாசகத்திற்கும் தவறாது கூட்டங்களுக்கு சமூகமளித்து ஒத்துழைப்புத் தந்த ஏனைய ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

சஞ்சிகைக்கு பழைய மாணவிகள் சிறந்த விடயங்களை எழுதி சங்கத்தின் ஆவணமாகவும் திகழும் இதழ் மேலும் சிறப்புற உதவ வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

செல்வி. சற்சொரூபவதி நாதன்
தலைவி
யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. Kailasapillai - Tribute

# 'Manitha Neyar' Cum Financial Wizard

KANDIAH NEELAKANDAN
General Secretary - All Ceylon
Hindu Congress

V. Kailasapillai was born on March 31, 1934 at Araly South in Jaffna District to a Hindu conservative family. He was one of the two children-both sons- of Kanapathiar Viswanathar and his wife Parvathiar. He lost his father at a tender age of four. He and his brother Dr. V. Ambalavanar who is a well-known economist and was always in public service ending up as Adviser on Economic Affairs and an Additional Secretary to the President were brought up by their mother with the assistance of their granduncle Sellappah, who is gratefully remembered by Kailasapillai forever.

## Financial assistance

Kailasapillai's family was one of the five families who gave substantial financial assistance to build All Ceylon Hindu Congress Head-quarters (ACHC HQ). When we wanted to honour his family he requested us to honour his uncle Sellappah whose portrait has been unveiled at ACHC HQ.

Having attended Araly Saraswathie Vidyalayam in the first years of primary education, he was admitted to Jaffna Hindu College which is one of the well-known premier Tamil Hindu educational institutions in this country. Kailasapillai excelled in his studies and entered the then University of Ceylon and he graduated from Colombo Campus as a Bachelor of Science specializing in Mathematics with honours.

Kailasapillai who is wellknown as 'Kailas' and also as 'John Kailas' to the business community of this country was a financial wizard from his young days and naturally for the maths genius his chosen profession was Accountancy.

## Accountancy Profession

Having been an internee at the then leading Chartered

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Accountancy Firm, of Satchithananda, Schokman and Wijeratne, Kailas was the obvious choice for Lander Prize which is awarded to the best student who excels in the final examination for the Chartered Accountants conducted by the Institute of Chartered Accountants.

He began at the bottom of the ladder and raised himself by degrees to the most exalted position in the accountancy profession by unremitting attention to his work and by his uncompromising commitment to the high ideals of his profession.

Having been a member of the Council of Examiners of the Institute he has held various posts in the Institute of Chartered Accountants ending up as its Vice-President.

Having worked in Mercantile Credit Limited for a short while as an Accountant he spent some time at Colombo Commercial Company Limited in the same capacity.

Thereafter he joined John Keells Limited where he came to be identified so closely with that Group. His friends used to call him 'John Kailas'. John Kailas created history in John Keells and made it a leading conglomerate. Having risen to be one of the Directors of the Group and ultimately retired as the Group Deputy Chairman of the John Keells Group.

Kailasapillai as the Finance Director of John Keells Group helped by his financial wizardry for John Keells to rise as a leading conglomerate. As recorded in 'Legacy" (the John Keells commemorative publication). "…….important influence on the diversification program was V. Kailasapillai The Finance Director showed himself to be an expert at capitalizing on incentives and concessions offered by the government to promote the development of specific industries and business sectors.

## Shareholders

He was even more adept at identifying ways to reduce the tax burden on the group and its shareholders by taking advantage of official tax breaks and shelters.

These talents were useful enough in the days of the United Front, but when that regime was replaced by an enterprise-friendly

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

government eager to use the private sector as an instrument of growth, Kailasapillai was in his element. In the report quoted above, Mark Bostock notes that 'the investment policy of the Company has enabled shareholders to receive a fair slice of their return free of tax.' They did so thanks to the financial wizardry of V. Kailasapillai."

Though Kailasapillai is a strict vegetarian and teetotaler throughout his life I am told that he had to keep a beer mug on his table-only as a showpiece just because he was a Director of John Keells.

It is a well-known 'secret' that he declined to be the Chairman of the Group because he felt that he could not throw parties or cocktails, for the reason that to Kailas, principles were more important than glory as the Group Chairman.

His success as a business leader is attributable to his characteristics as a typical industrious Jaffna man. When he was asked of success he said sternly:

## Profits

"It won't just fall on your lap, you have to work hard, sweat for it." Then he added with a mischievously innocent smile, 'And of course, you have to take risks.' With tea and tourism in regress, most of Keells' income in the late eighties was derived from Keels Food Products and the other businesses into which the group continued to diversify. Turnover and profits continued to rise year on year, as much a tribute to V. Kailasapillai's financial skills as to the slowly improving business climate.

Kailasapillai and their colleagues, having discovered the capital-conjuring magic of the stock market relatively early, were determined to make the group and its holding company as investor-friendly as possible.

"Trade in company shares was modest at the beginning of the Eighties. Relatively few companies were publicly quoted and there was little investment capital available.

The share market was the preserve of a handful of wealthy, knowledgeable investors….." However, Kailasapillai in his own

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

unique style had John Keells Holdings Limited ('JKH') listed on Colombo Stock Exchange on October 9, 1986. Of course, JKH has been dominating Colombo Stock Market since then.

Of course, although I do not have personal knowledge of his role in that sphere, the historical records and the Business Leaders still recall his achievements in John Keells and Colombo Stock Exchange which he has once led.

## Colombo Stock Exchange

Of course, if he feels that he should not remain any more no one can stop him stepping down. In 1993, he resigned from the Chairmanship of the Colombo Stock Exchange.

News was flashed 'Kailasapillai's resignation rocks Colombo Stock Market.' His colleagues wanted to persuade him but he had flown to Malaysia. I can guess that he would have gone to meet his Guru Swami Shanthananda Saraswathi (Head of Siva Family) whose guidance and blessing were his strength.

In 1983 also he did that of course, through Singapore. I would like to quote from what Richard Simon has written in the 'Legacy.'

'Tamils have traditionally seen education as a way out of relative poverty and routine discrimination, John Keells ' financial genius, Viswanathan Kailasapillai, is only one of hundreds of thousands of intelligent, industrious Tamils who have successfully traveled that route, ……

"….The most senior victim at Keels was the Finance Director himself. V. Kailasapillai's home was destroyed. While his family, sought refuge with relatives, he himself was smuggled into Keel Hall by David Blackler. He remained there, in hiding, for three days, The experience was so traumatic that Kailasapillai vowed to leave Sri Lanka forever. When a semblance of normality had returned to operations at. Katunayake Airport, he, his wife and another relative whose father had been murdered by the rioters were driven to the airport by David and Jennifer Blackler in separate cars.

## Rioters

There was anarchy on the streets that day: the mobs were

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

stopping motorists and assaulting those they reckoned were Tamil. "There was all kinds of trouble going on" says Blackler laconically", I told Jennifer, if we're stopped on the road and I put my flashers on, just do a U-turn and scramble". But the rioters were not interested in vehicles driven by Europeans, the little convoy got through, and Kailasapillai caught his flight to Singapore without an incident. He would later change his mind and return to Sri Lanka with his family.

His family background and education in Jaffna Hindu College naturally made him an active religious worker. He was almost involved in every Hindu religious institution in Colombo and he has held various offices in those institutions and in particular as the President of Colombo Vivekananda Society of which he is now a patron. In the late eighties when V. Balasubramaniam was the President of All Ceylon Hindu Congress (the Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka) he persuaded Kailasapillai to be the Deputy President of All Ceylon Hindu Congress.

Kailasapillai's 75$^{th}$ birthday was on March 31,2009. It is an interesting coincidence that the birthday of this financial wizard is "the balance sheet date" within the meaning of the new Companies Act. He has declined to be invited to any felicitation. However at a book release on March 29,2009, he was conferred with the title'MANITHANEYAKA' (meaning a human being who loves and works for the others') by the Chief Prelate of Nalluar Aatheenam, Jaffna

Courtesy:- Ceylon Daily News 23-0402009

எங்களுடைய மன்றத்திற்கு மனோதர்ம ரீதியிலும் வேறு பல வழிகளிலும் உதவியும் ஆலோசனையும் வழங்கி சங்கத்தின் பணிகளுக்கு உறுதுணையாக எமது மதிப்பை பெற்றுள்ள திரு.வி. கயிலாசபிள்ளை அவர்களுக்கு சங்கத்தின் வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவிக்கும் முகமாக இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது. (படம் முன் உள் அட்டையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுகிறோம்

இந்து மதம் விரதங்கள், விழாக்கள் என்ற தலைப்பில் ஒரு சிறந்த இந்து சமய நூலை எமது கல்லூரியின் பழைய மாணவி திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் வெளியிட்டு உள்ளார்கள். இது எமக்குப் பெரும் புகழை ஈட்டித் தருவதாக உள்ளது. எமது பாராட்டைத் தெரிவிப்பதுடன் அவர் பற்றிய சிறிய வாழ்க்கைக் குறிப்பையும் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தருக்கும் திருமதி தெய்வயானைப்பிள்ளை திருஞானசம்பந்தருக்கும் கனிஷ்ட புதல்வியாகப் பிறந்தவர் இவர். பண்டிதரவர்கள் யாழ் "இந்து சாதனம்" பத்திரிகையின் ஆசிரியராகவும், யாழ். இந்துக் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராகவும் கடமையாற்றினார். தந்தையைப் போல் தமிழிலும் சைவசமயத்திலும் பாண்டித்தியம் பெற்ற இவர், இன்று நாடறிந்த ஒரு ஆன்மீகப் பேச்சாளராகவும் வீணை இசைக்கலைஞராகவும் உள்ளார். இவர், புகழும் சிறப்பும் பெற்ற உரையாசிரியர் மட்டுவில் ம. கதிரவேற்பிள்ளையின் வழிவந்தவராவார்.

இவர் ஆரம்பக்கல்வியையும் உயர்கல்வியையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியிற் கற்று சென்னையில் முதற்பட்டமும் இலங்கைப் பல்கலைக்கழக முதுமானிப்பட்டமும் பெற்றவர். 1950களில் கல்வித் துறையில் அரச பாடசாலைகளிற் கல்வி கற்பித்து. தமது ஆளுமைத் திறத்தால் அதிபர் சேவையை எய்தினார். அவரது கல்விச்சேவையின் ஒரு கட்டமாக யாழ் உயர் தொழினுட்பக் கல்லூரியில் இணைந்து ஆங்கில விரிவுரையாளராய்க் கடமையாற்றினார்.

அவரது அபாரமான அற்புதமான மொழியாற்றலாலும் பரந்த அறிவாற்றலாலும் இன்று சமய, ஆன்மீக, இலக்கியப் பேச்சாளராகத் திகழ்கிறார். இவரது பன்முக ஆற்றலை அறியாதார் இல்லை. இவர் ஒரு வீணையாசிரியருமாவர். கொழும்பில் நடைபெறும் வீணைக்கச்சேரிகளில் இவரதும் இவரது மகள் ராதை குமாரதாஸ் அவர்களினதும் மாணவர்கள் பங்குபற்றி வருகின்றார்கள்.

இன்றும் வானொலியில் இவரது "நற்சிந்தனைகள்" மற்றும் பயன்படக்கூடிய ஆன்மீகச் சொற்பொழிவுகளை அடிக்கடி கேட்டுப் பாராட்டாதோர் இல்லை. திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் "சைவசித்தாந்தமணி" விருது பெற்றவர். இவரின் கல்வி, இசை, சமயப்பணிகள் மேன்மேலும் வளர வேண்டும் என்பதே இவரில் பற்றுடையோரின் அவா! (படம் முன் உள் அட்டையில்)

– திலகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் உரிமைகள்

எமது நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில் பால் வேறுபாடு காரணமாக பெண்கள் எவ்விதத்திலும் வேறுபாடுகாட்டப்படக் கூடாதெனவும் பெண்களும் ஆண்களும் சமனாகவே கருதப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்பு, பதவி உயர்வு, ஆதன உரிமைகள், பொதுநிறுவனங்களில் பதவி வகித்தல், என அவை பலவாகும். 1933ஆம் ஆண்டு பால் தகைமையீனச் சட்டம் ஆக்கப்படும் வரை பெண்கள் சட்டத்தரணிகளாகவோ நொத்தாரிசுகளாகவோ சத்திய ஆணையாளராகவோ கடமை புரிவதில் இருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பெண்களின் உரிமைகளை உறுதி செய்யும் பல சட்டவாக்கங்கள் உள்ளன. அவற்றுள் சில வருமாறு:-

**மணமுடித்த பெண்கள் ஆதன சட்டம்**
**மண உரிமைகளும் அடுத்துறு உரிமைகளும் சட்டம்**
**மண உரிமைகளும் அடுத்துறு உரிமைகளும் (யாழ்ப்பாணம்) சட்டம்**
**தேசவழமைச்சட்டம்**

### சீவிய உரித்து

எவரேனும் ஒருவர் தனது ஆதனம் ஒன்றை எவரேனும் ஆள் ஒருவருக்கு நன்கொடை அளிக்கும் போது அல்லது வேறு ஏதேனும் வகையாய் மாற்றிக் கொடுக்கும் போது அவ்வாள் குறித்த ஆதனத்தின் மீது தனக்கு சீவிய உரித்தினை வைத்துக்கொண்டு அவ்விதமான மாற்றம் ஒன்றைச் செய்யலாம். அவ்விதம் சீவிய உரித்தொன்று இருக்குமாயின் சீவிய உரித்துடையவர் அவர் உயிரோடிருக்கும் வரை குறித்த ஆதனத்தில் உடைமையில் இருக்கவும் அவ்வாதனத்தை சீவிய உரித்துக்கமைவாக வேறு எவரேனுக்கும் கையுதிர்ப்புச் செய்யலாம். சீவிய உரித்துக்காரர் விரும்பினால் அவர் சீவிய உரித்தைக் கைதுறக்கலாம். சீவிய உரித்தின் மூலம் ஒருவர் ஒரு குறித்த ஆதனத்தில் உடமையில் இருக்கும் உரித்தினை மட்டும் பெறுகின்றாரேயொழிய ஆதனத்தில் உள்ள உரிமையை இழந்து விடுகிறார்.

### இறுதி விருப்பாவணம் அல்லது உயில்

எவரேனும் ஒருவர் இறுதி விருப்பாவணம் ஒன்றை நிறைவேற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினால் அவர் தனது விருப்பத்தை ஐவர் அல்லது அதற்கு மேம்பட்டோர் முன்னிலையில் எழுதி கையொப்பம் இட்டால் அது ஒரு சட்டமுறையான இறுதி விருப்பாவணம் ஆகும். வேண்டுமெனின் நொத்தாரிசு ஒருவர் முகதாவிலும் நிறைவேற்றப்படலாம்.

அவ்விதம் நிறைவேற்றப்பட்ட ஆவணம் ஒன்று அதனை நிறைவேற்றியவர் இறந்த பின்னர் மூன்று மாதங்களுக்குள் எவரது உடைமையில் அவ்விருப்பாவணம் இருக்கிறதோ அவர் வதிகின்ற இடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றில் அல்லது இறுதி விருப்பாவணம் நிறைவேற்றியவர் எங்கு இறந்தாரோ அந்த இடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்து இறந்தவரின் அனுமதியைப் பெறவேண்டும். குறித்த அனுமதியை நிறைவேற்றுப் பத்திரம் (probate) என சட்டச் சொல்லால் அழைப்பர். இறுதி விருப்பாவணம் இல்லாமல் சொத்துள்ள ஒருவர் இறந்து போனால் அவர் இறந்து மூன்று மாதங்களுக்குள் அவரின் சொத்துக்களை நிர்வகிக்க மாவட்ட நீதிமன்றுக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும். அவ்விதமான வழக்கொன்றில் நீதிமன்றினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் நிர்வாகப்பத்திரம் (letters of administration) என சட்டத்தில் அழைக்கப்படும். மேற்குறித்த நிர்வாகப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பிப்போர் பின்வரும் ஆவணங்களை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

1. இறுதி விருப்பாவணம்
2. இறந்தவரின் மரண அத்தாட்சிப் பத்திரம்
3. தமிழ் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் உள்ள செய்திப்பத்திரிகைகளில் வழக்குக் குறித்த அறிவித்தல்
4. இறந்தவரின் சொத்து விபரப் பட்டியல்
5. கடன் இருப்பின் இறந்தவரின் கடன் விபரப் பட்டியல்
6. மரணச்சடங்குச் செலவு விபரப் பட்டியல்

விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு மூன்று மாதங்களுக்கு மேல் காலம் கடந்திருந்தால் காலம் கடந்து விண்ணப்பம் செய்வதற்கான காரணத்தை விளக்கும் சத்தியக் கூற்றொன்றும் இணைக்கப்படுதல் வேண்டும்.


2008ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 10ம் திகதி லயன் கழகத்துடன் இணைந்து இலவச மருத்துவ சட்ட முகாமும் மலிவு விற்பனையும் நடாத்தப்பட்டது. அப்பொழுது சட்டத்தரணி திருமதி சுகந்தி ராஜகுலேந்திரன் அவர்களால் விநியோகிக்கப்பட்ட தகவல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Eras Mentioned in Hinduism




According to the dockets of Hindu chronology the very first era, after the creation of the world was known as the Kruthe Yugam which lasted 17,28,000 years. So says the Almanac. During this era there was an upholding of Dharma by every living being. It was towards the end of this era an atrocious deed was done by a Kshaktriya (Royal Personage). There was a rishi by the name of Gamathakni. His spouse was Renuka and their son was Parasuramar. Over a dispute a king had cut off the head of the rishi. The outraged son vowed to avenge the father's death by killing every Kshaktriya he confronted. Renuka his mother let loose her hair and wailed. Only in distress a woman would let loose her hair. The krutha Yugam was annihilated after this by the curse of Renuka.



This Yugam was followed by the Thretha Yugam when Ramayana took place. This era lasted for about 12,96,000 years according to the Hindu almanac. Sita wife of Sri Rama was coveted by Ravana the Rakshasa King of Lanka. He carried her over to his kingdom and kept her in a

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

secluded spot known as "Asoka Vanam." She was guarded by the Rakshasa women. But Sita remained true to Rama and Ravana could not persuade her to accept him. On the other hand Sita let loose her hair and vowed that the Ravana clan be completely wiped out by Sri Rama. Thus Thretha Yugam ended after the malediction of another virtuous woman.



The DwaparaYyugam of 8,64,000 years is next. This was when Mahabaratha took place. When the Gauravas insulted Drawpathy in the court in the presence of the Pandavas, she let loose her hair and vowed that she would put up her hair only after King Duriyodhana's death. So the Dwapara Yugam ended.



The present Kali Yugam has a life line of 4,32,000 years. It is in this Yugam that Kannagi - later worshipped as Pathini Amman, on the erroneous judgement of the Pandiya King who had her husband executed, let loose her hair and burnt the city of Madurai.



In every era we see the complete annihilation of the world itself by the anger, fury, rage and frenzy of a woman. Woe betide the Hindu world for now in this era almost all Hindu women are with hair loose, whether married or widowed, whether in a temple

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



or at weddings, whether in distress or not, a most inauspicious action - in Tamil it is referred to as "Thalaivirikolam". So with the advent of Kalki, and all these loose haired women, the Kali Yugam is awaiting its end.

Thilaka V. Wijeyaratnam

Courtesy:- Daily News
(Incarnations of God Vishnu)

# கல்லூரியின் சிறந்த மாணவிகள்

2001 செல்வி காயத்திரி சிற்சபேசன்

2002 செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன்

2003 செல்வி நிலக்ஷி மகாதேவா

2004 செல்வி துளசி கந்தசாமி

2005 செல்வி பாமினி பரஞ்சோதி

2006 செல்வி கபிலினி அரட்செல்வன்

2007 செல்வி கோபிகா குலசிங்கம்

2008 செல்வி மோகனரஞ்சனி ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவத்தில் மருந்து

மனித வாழ்விற்கு இன்றியமையாத அறநெறிகள் வள்ளுவத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மனித உடல் நலத்திற்கு உரிய நெறிகளும் காணப்படுகின்றன.



அவற்றுள் ஒன்றுதான் மருந்து பற்றிய கருத்துக்கள். வள்ளுவம் மருந்து என்ற அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களையும் மருந்து என்ற சொல் அமைந்த நிலையில் ஏழு குறட்பாக்களையும் கொண்டு மிளிர்கிறது.

எனவே வள்ளுவத்தில் மருந்தைப் பற்றிக் காணுகின்ற நாம் அதிகாரப் பொருள் என்றும் தனிக்குறள் தரும் பொருள் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம்.

மருந்து என்பதை வள்ளுவம் மூலிகையாகவோ பிணி போக்கும் பொருளாகவோ குறிப்பிடாது அது மனிதனுக்குத் தேவையற்ற ஒரு பொருள் என்றே கருதுகிறது. எனவே மருந்து வேண்டாதவன் எவ்வாறு ஒழுகுதல் வேண்டும் என்பதையே மருந்து அதிகாரம் பத்துக் குறட்பாக்களால் வலியுறுத்துகிறது.

அதனால்தான் மனிதனுக்கு வேண்டாத பெண்வழிச் சேறல், கள்ளுண்ணுதல், சூது ஆகியவை வேண்டா எனக்கூறும் பொருட்பாலில் வேண்டாத மருந்துகளை வைத்துள்ளது.

வள்ளுவன் கூறும் மருந்து என்பது ஒரு தனிப்பொருள் அல்ல. அது உணவைக் கட்டுப்படுத்துவதேயாகும். இதனைத்தான் ஏழு குறட்பாக்கள் தெளிவாகக் கூறுகின்றன. எஞ்சிய குறட்பாக்களில் மூன்றில் இரண்டு மருந்து தரும் மருத்துவனின் செயலையும் இறுதிக் குறள் மருந்து என்பது பிணியாளன், மருத்துவன், மருந்து, மருத்துவன் செயல் என்ற நான்கில் அமைந்துள்ளதாகக் கூறுகிறது.

முதல் 5 குறள்களும் யாருக்கு மருந்து தேவைப்படாது என்பதை விளக்குவதாகும். ஒருவன் தன் நிலைக்குரிய அளவில் உணவிலும் செயலிலும் மிகாது வாழ்கிறானோ, அவனுக்கும், முன் உண்டது சமிபாடடைந்துள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அறிந்து அதற்கேற்ப பின் உண்பவனுக்கும், நன்கு பசித்த பிறகே உண்ணுகின்றவனுக்கும் மருந்து தேவைப்படாது என்று வள்ளுவம் கூறுகிறது.

மிகினும் குறைபினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. (941)

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின். (942)

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு (943)

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. (944)

மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு. (945)

என்பன குறட்பாக்கள். இவ்வாறு மருந்து வேண்டாதவன் யார் என்று வகுத்த வள்ளுவம், எவரிடத்தில் பிணிதங்கும் என்பதை எடுத்துக் கூறி மருந்து வேண்டப்படுபவன் பற்றியும் அடையாளப்படுத்தியுள்ளது.

**(மருந்து வேண்டாதவர்கள் எவ்விதம் ஒழுகவேண்டும் என்பதை மருந்து அதிகாரம் விளக்குகிறது.)**

அதிகமாக இரையை விழுங்குபவனுக்கு நீங்காத நோய் பீடிக்கும் என்ற பொருளில் "நிற்கும் கழிபேர் இரையான் கண் நோய்." என்றும் ஜீரண சக்தியை அறியாது உண்பவனுக்கு நோய் வளரும் என்பதை

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். (947)

என்றும் வள்ளுவம் உணர்த்தி நிற்கிறது. இனி மருந்து தேவைப்படுமாயின் அதைக் கொடுக்கும் திறனை

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (948)

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். (949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வரையறுத்துள்ளது. மருத்துவன் முதலில் நோய்க்கான காரணத்தை அறியவேண்டும். நோய் நாடி, நோய் முதல் நாடி என்ற தொடர்கள் இதனை உணர்த்துகின்றன.

விலங்குகளையும், மர வகைகளையும், உணவு வகைகளையும், கருவி வகைகளையும் ஆங்காங்கு சுட்டிக்காட்டிய வள்ளுவம் ஏன் மருந்து வகைகளை சுட்டிக் காட்டவில்லை என்றதொரு வினா எழலாம்.

ஆனால் இந்தக் கேள்விக்கு விடை போன்று அறத்துப்பாலில் இரு இடங்களில் மருந்தின் வகையாக சாவா மருந்தினையும் மருந்தாகித்தப்பா மரத்தற்றால் என்று சாவா மரமும் குறிப்பிடப்படுகின்றது. இதிலிருந்து வள்ளுவர் காலத்தில் இயற்கை வைத்தியம் தழைத்திருந்தது என்பது பெறப்படுகிறது.

வள்ளுவத்தில் மருந்து வேண்டா நிலையும், வேண்டின் எவ்வாறு அதனை அளித்திடல் வேண்டும் என்பதும், மருந்தின் வகையும் குறிப்பிடப்பட்டுள்ளன என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

செல்வி. சற்சொரூபவதி நாதன்.

நன்றி:- சங்கமம் சனிக்கிழமை, மார்ச் 22, 2008. பக்கம் 02

## யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி

கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினால் திறமையான வசதி குறைந்த 10 மாணவர்களுக்கு நிலையான வைப்பிலிருந்து மாதாந்தம் தலா ரூபா 500/= வழங்கப்பட்டு வருகிறது.

அவர்களின் பெயர் கீழே உள்ளது.

| | | |
|---|---|---|
| 01. | பிரவீனா பரமேஸ்வரன் | - - 11 பி |
| 02. | தீபிகா ஸ்ரீஸ்கந்தராஜா | - - 11 எப் |
| 03. | வஜிதா தவராஜா | - - 11 சி |
| 04. | யுவேரகா துஸ்யந்தன் | - - 8 ஈ |
| 05. | மயூரதி குகனேஸ்வரன் | - - 10 ஈ |
| 06. | பவித்திரா விக்ரர்விஜயநாதன் | - - 8 எப் |
| 07. | வான்மதி நாகலிங்கம் | - - 7 பி |
| 08. | பவானி குகதாசன் | - - 7 சி |
| 09. | பிரசாந்தி மதியரசன் | - - 7 டி |
| 10. | தர்சிகா பாலேந்திரன் | - - 7 ஈ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடலெரிவிற்கான உணவுகளும் கை மருந்துகளும்

- ♠ புடலங்காய், வல்லாரை பச்சையாக உணவுடன் உள்ளெடுத்தல்.
- ♠ முளைக்கீரை, முருங்கை இலை, அகத்திக்கீரை, மணத்தக்காளியிலை, கோவா, முட்டைக்கோஸ், மஞ்சள், கருணைக்கிழங்கு, தேங்காய்ப்பால், பால், மோர், நெய் ஆகியன குடலுக்கு இதம் தரும் உணவுகளாகும்.
- ♠ ஈரவெங்காயம் பச்சையாக உணவுடன் அதிகம் உள்கொள்ளல். அத்துடன் காலையில் வெறும் வயிற்றில் இரவுபூராகவும் ஊறவைத்த சோற்று நீருடன் சிறுதுண்டுகளாக நறுக்கிய ஈரவெங்காயம் சேர்த்துக் குடித்தல்.
- ♠ நற்சீரகம் இரவில் ஊற வைத்து காலையில் ஊறல் நீரைப் பருகிவரல்.
- ♠ நீற்றுப்பூசணிச்சாறு 1/4 கோப்பை தினமும் குடித்தல்.
- ♠ கற்றாளைச்சோறு ஊறவிட்டு அரைத்த பயறு இரண்டையும் சுடு சாம்பலினுள் வைத்து அவித்து பிழிந்தெடுத்த சாறு இரண்டு மேசைக்கரண்டி தினமும் இரு தடவை பனங்கட்டி அல்லது கித்துள்பனங்கட்டியுடன் குடித்தல்.
- ♠ வேப்பங்கொட்டையை இடித்து பிழிந்த சாறு இரண்டு மேசைக்கரண்டி ஒரு நாளைக்கு இரண்டு தடவை காலை மாலை குடித்தல்.
- ♠ கையாந்தகரை இடித்துப் பிழிந்த சாறு ஒரு நாளைக்கு இரண்டு தடவை அருந்துதல்.
- ♠ மணத்தக்காளி இலை நெய்யில் வறுத்து உண்ணல்.
- ♠ முட்டைக்கோஸ் இலைச்சாறு, வெள்ளரிக்காய் சாறு வயிறு எரிவுக்கு சிறந்தது. தேன் நீருடன் கலந்து அருந்துதல்.
- ♠ கறுவாப்பட்டை பொடிசெய்து தேனுடன் கலந்து அருந்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♠ மஞ்சளை தணலில் இட்டு எரித்து கரியானபின் தொடர்ந்து எரித்து அதனை சாம்பலாக எடுத்து அத்துடன் அதிமதுரம் மஞ்சள் தூளாக்கி தேனுடன் அல்லது ஊறல் குடிநீராக்கி அருந்துதல்.

♠ மாதுளம் பழச்சாறு தினமும் குடித்தல்.

♠ வில்வம்பழச்சதையை சக்கரை சேர்த்து குழைத்து சாப்பிடல்.

♠ கெக்கரி வெள்ளரிக்காய் உள் காணப்படும் சளிப்பற்றான பகுதியை எடுத்து பிலெண்டரில் போட்டு அடித்து குளுக்கோஸ் சேர்த்து சாப்பிடல்.

♠ குறிஞ்சாகீரை தொடர்ந்து சாப்பிட்டுவர வயிற்றுப்புண், வயிற்றுவலி குணமாகும்.

♠ பிரண்டைத்துளிர் சம்பல் செய்து சாப்பிடல்.

♠ கற்றாளைச்சோறு நீரில் கழுவி சமைத்துண்ணல்.

♠ சீரகம் இளவறுப்பாக வறுத்து சூரணமாக்கி தினம் உண்ணல்.

♠ சுக்கு, மிளகு, திப்பிலி, ஆவாரம்பூ, அதிமதுரம், ஏலம், வால்மிளகு, சிறுதேக்கு வகை 10 கிராம் எடுத்து நீருடன் காய்ச்சி குடித்தல்.

♠ வயிற்றுப்புண்ணுக்கு காரணமாக கிருமிகளும் இனங்காணப்பட்டுள்ளன. அந்நிலையில் முருங்கையிலை குச்சி கருவேப்பிலை குச்சி ஒன்றாக காய்ச்சி குடிநீராக குடிக்க வயிறு உபாதை தீரும். வயிற்றுப்புழுக்கள் வெளியேறும்.

2008ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10ம் திகதி லயன் கழகத்துடன் இணைந்து இலவச மருத்துவ சட்ட முகாமும் மலிவு விற்பனையும் நடாத்தப்பட்டது. அப்பொழுது சித்தவைத்தியர் டாக்டர் திருமதி விக்கினேஸ்வரி செல்வநாதன் அவர்களால் விநியோகிக்கப்பட்ட தகவல்கள்.

எங்கள் சங்கம் ஸ்தாபித்த www.jhlc.lk என்ற இணையத்தளம் தொடர்ந்து நிர்வகிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பாற்கடல் திருமகளின் திருமணம்

காப்பு

இந்த பிறவிப் பெருங்கடலின் பற்றுக்களை அறுத்து
இனி பிறவாதிருக்க அருள் புரிவாய் மகாலட்சுமி தாயே.

நூல்

தேவர்கள் பலம் பெற அமிர்தத்தை பெறும் பொருட்டு - மாதவனே!
நின் ஆலோசனைப்படி தேவர்களும் அசுரர்களும்
மந்தரமலையை மத்தாகவும் வாசுகி பாம்பை கயிறாகவும் கொண்டு
பாற்கடலை கடைகையிலே மலை சரியவே - நின்னை
வேண்ட நீ ஆமை உரு எடுத்து மலையைதாங்கினாயே இறைவா!

அவர்கள் மீண்டும் உற்சாகத்துடன் கடைந்தார்கள் - அப்பொழுது
பாற்கடலில் இருந்து ஆலகால விஷம் பயங்கர நெருப்பாக வெளிப்படவே
அதைக் கண்டு பயந்த தேவ அசுரர்கள் சிவனை தஞ்சமடைந்து துதிக்கவே
பரமசிவனும் மகிழ்ந்து உனது விருப்பப்படி ஆலகால விஷத்தை பருகினாரே.

மும்மூர்த்திகளின் வடிவான மாதவனே! தேவ அசுரர்கள் - நின்னை
வேண்டி புது முயற்சியுடன் பாற்கடலை கடையவே
அதில் இருந்து காமதேனு எனும் தெய்வீகப் பசு தோன்ற
ஐயனே! அவளை நீர் வேள்விகள் காக்க ரிஷிகளிடம் அளித்தீரே!
தொடர்ந்து தோன்றிய உச்சை சிரவஸ் எனும் மிகச் சிறந்த குதிரை
ஐராவதம் எனும் சிறந்த யானை கற்பக மரம்
அப்சரஸ்த்ரீ கணங்கள் - அத்தனையும்
நீங்கள் தேவர்களுக்கு அளித்தீகள்.

ஜகதீசரே! மனதை தங்களிடமே வைத்தவளும்
மனதிற்கினியவளுமான மகாலட்சுமி தோன்றினாள்.
மாசில்லாத அந்த மகாலட்சுமியைக் கண்ட யாவரும் - நெஞ்சம்
பரபரக்க அவளை அடையவே விரும்பினர்ர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனத்தையுடைய லட்சுமி தேவிக்கு
தேவேந்திரன் ரத்னமயமான பீடத்தை அளித்தான்.
எல்லோரும் அபிஷேக சாமான்கள் சாதனங்களை கொண்டு வர
மகரிஷிகள் வேத கோஷங்களோடு அபிஷேகம் செய்தார்கள்.
தன்மேல் சொரிந்த அபிஷேக நீரோடு – உங்கள்
பாசப் பார்வைகளையும் உள் வாங்கிப் பிரகாசிப்பவளும்
அணி செய்யப்பட்ட கொடியென விளங்குபவளுமான – மகாலட்சுமியை
தேவர்கள் ரத்ன குண்டலங்கள், ஹாரம் போன்ற அணிகலன்களாலும்
மஞ்சள் பட்டு சேலையாலும் அலங்கரித்தார்கள்.

அழகு பதுமையான மகாலட்சுமி மலரின் வாசனையால்
வண்டுகள் ரீங்காரத்துடன் சுற்றி சுற்றி மொய்த்துக் கொண்டிருந்த
சுயம்வரமாலையை கையில் ஏந்தி – உங்களை நோக்கி
கும்பங்கள் போன்ற அவளின் தனங்களின் பாரம்
அழுத்தியதால் மென்நடையாக வருகையிலே பாதச் சிலம்பு
ஜல் ஜல் ஜல்லென்று ஒலிக்கவே நாணம் போட்டியிட
நடந்து வந்து உங்களை அடைந்தாள்.
சிவன் பிரம்மா ரிஷிகள் தேவர்கள் அசுரர்கள் முன்னிலையில்
எல்லா நல்ல குணங்களையும் உடையவரும்
மனதை மயக்கும் மாயவருமாகிய தங்களுக்கே
மகாலட்சுமியால் மாலை சமர்ப்பிக்கப்பட்டது.
லோக மாதாவும் உம்மைத் தவிர – வேறு எவரிடத்திலும்
நாட்டமில்லாதவளாகவும் இருந்த அந்த தேவியை
உடனே நீர் உமது மார்பில் தாங்கி பெருமைப் படுத்தினீர்.
உமது மார்பில் பிரகாசித்த மகாலட்சுமியின் – சுபிட்சம் என்ற
இன்ப மழையால் உலகமே செழித்தது.

லோக மாதா என்றால் அசுரர்களுக்கும் தாய்தானே!
அவர்கள் மகிழ ஏதேனும் தரவேண்டும் அல்லவா!
எவரையும் விரைவில் மயங்கச் செய்யும் குணமுடையவளும்
வீண் திமிர் கர்வம் கோபம் சுயநினைவின்மை
ஆகியவற்றை உண்டாக்கும் வல்லமை படைத்தவளும்
தமோ குணத்திற்கு இருப்பிடமான மதுவுக்கு
அதி தேவதையுமான வாருணீதேவி
பாற்கடலிலிருந்து வெளிப்படவே அவளை அசுரர்களுக்கு
பாற்கடலை கடைந்ததற்கு வெகுமதியாக அளித்தீர்கள்.

பின் மேகம் போல திரண்ட அழகுத் திருமேனியொடு
இரு கரங்களிலும் அமிர்த கலசத்தை ஏந்திக் கொண்டு
கடலினின்று தன்வந்திரியாகத் தாங்களே வெளிப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்த கலசத்தை தேவர்களுக்கு அளித்தீர்கள்.
பலம் கொண்ட அசுரர் அதை பறித்துச் செல்லவே
மோகினி வடிவெடுத்து அவர்களை மயக்கி
அமிர்தத்தை தேவருக்கு பகிர்ந்து கொடுக்கையிலே ஓர் அசுரன்
தேவவடிவெடுத்து அமிர்தத்தை பருகவே அவன் தலையை
வெட்டி தண்டனை அளித்து பின் தலைக்கு பாம்பு உடலும்
உடம்புக்கு பாம்புத் தலையும் அருளி ராகு கேது ஆக
நவக்கிரக பதவியும் அளித்து அநுக்கிரகம் செய்தீர்கள்.

மாதவா! என்வாழ்வில் மங்கலங்கள் நிலைத்திட அருள்வீராக!
வறுமைகள் விலகவும் நோய்கள் நீங்கி ஆரோக்கியம் பெறவும்
நீண்ட ஆயுள் பெறவும் அருள் புரிவீராக!
என்றும் நின் திருவடியை மறவாதிருக்க அருள் செய்வீராக!

எட்டு திக்கிலிருந்தும் திருமாலைக் காக்கும் அட்டலட்சுமி தாயே
நின் பாதம் சரணம் சரணம் சரணம் தாயே!!

*ஆக்கம் - திருமதி விமலா மணிவாசகன்.*

# யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி

கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினால் வசதி குறைந்த 3 மாணவர்களுக்கு நிலையான வைப்பிலிருந்து வருடம் ஒரு முறை தலா ரூபா 4000/= வழங்கப்பட்டு வருகிறது. அதனை அவர்களின் வயதைக் கருத்தில் கொண்டு அதிபர் திருமதி T. A. துரைசிங்கம் 3 மாணவிகளுக்கும் ஹற்றன் நஷனல் வங்கில் கணக்கு திறந்து 2009 ஆம் ஆண்டுக்கான உதவிப் பணமாக வைப்புச் செய்துள்ளார்.

இதனை உறுதிப்படுத்தி மாணவிகளின் கையொப்பத்துடன் 30-11-2009 திகதி இடப்பட்ட கடிதம் ஒன்றும் எங்கள் சங்கத்திற்கு அனுப்பி உள்ளார்.

அவர்களின் பெயர் கீழே உள்ளது.

| | |
|---|---|
| செல்வி. தமிழினி நந்தகுமார் | - - 2 பி |
| செல்வி. கனிஸ்ரா கோலிலராஜா | - - 3 பி |
| செல்வி. சாரங்கா ரஞ்சன் | - - 4 ஏ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆலயத்தில் செய்யத் தகாதவைகள்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஆன்றோர் வாக்கு. ஆலய தரிசனத்திற்குரிய மிகாப்புண்ணிய தினங்களாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம். சோமவாரம், மங்களவாரம், வெள்ளிக்கிழமை, பௌர்ணமி, அமாவாசை, பிரதோஷம், மாதப்பிறப்பு, சூரிய சந்திர கிரகண நாட்கள், சிவராத்திரி, நவராத்திரி, திருவாதிரை, திருவிளக்கீடு, திருவெம்பாவை நாட்கள், ஆடிச்செவ்வாய், ஆவணிச் சதுர்த்தி என்பனவாம்.

ஆலயங்களைத் தரிசித்தால் மாத்திரம் போதாது. அங்கு நாம் வழிபடும் முறை, செய்ய வேண்டியவை, செய்யத்தகாதவை என்ற விதிமுறைகளையும் அடியார்கள் பின்பற்றியாக வேண்டும். ஆசாரமில்லாது ஆலயம் செல்லல், ஆலய வாசலில் கால் கழுவாமல் உட்செல்லுதல், வீதியில் எச்சில் உமிழ்தல், சிரசிலே தோளிலே வஸ்திரம் தரித்தல், ஆண்கள் மேலாடை அணிந்து செல்லுதல், பாதரட்சையுடன் உட்செல்லுதல், விக்கிரகங்களைத் தொடுதல், ஆலய கோபுரம், ஸ்தூபி ஆகியவற்றின் நிழலை மிதித்தல், சுவாமிக்கும் பலிபீடத்துக்குமிடையே குறுக்கே செல்லுதல், அபிடேகம் இடம்பெறும் போதும் திரையிட்டிருக்கும் போதும் வணங்குதல், கோயிற் பிரசாதத்தைக் கீழே சிந்துதல், உட்பிரகாரத்திலே கால் நீட்டிக்கொண்டிருத்தல் ஆகியனவாம். இவை சைவத்தையும் தமிழையும் வளர்த்த நாவலர் பெருமான் எமக்கு தந்த அறிவுரைகள்.

ஆலயம் சென்றதும் முதலில் ராஜகோபுரத்தை வணங்கிய பின் உள்ளே சென்று சிவமந்திரத்தை உச்சரித்த வண்ணம் பலிபீடத்துக்கு அருகே நின்று பலிபீடம், கொடித்தம்பம், மூலவர் ஆகியவற்றை வணங்கி பின் பரிவாரத் தெய்வங்களை வணங்க வேண்டும். பரிவாரத் தெய்வங்களுள் முதலில் வணங்கப்பட வேண்டியவர் விநாயகப் பெருமான் ஆவர். ஆலயத்தை வலம்வரும் போது 3 அல்லது 5 அல்லது 7 அல்லது 9 தரம் வலம்வருதல் முறையாகும். தரிசன முடிவில் சண்டேஸ்வரர் முன்னிலையில் நின்று தரிசன பலனைத் தந்தருளுமாறு வேண்டி வழிபடுதல் முறையாகும். இச்சந்தர்ப்பத்தில் சண்டேஸ்வரர் முன்னிலையில் பெரிய ஓசையில் கைகொட்டி வணங்குவதும் எமது ஆடையிலிருந்து நூலைத் தன்னும் பிரித்து அவர் சந்நிதியில் இடுதலும் எமது வழக்கத்தில் இருந்து வருகின்றது. இவை அவசிய மற்றவை என்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்கள். இதன் பின்னணியை நோக்குவோம். சண்டேஸ்வர மூர்த்தியின் தியான நிலைக்கு பங்கம் வராமல் கைதட்டிப் பெரிய ஓசை எழுப்பாது நாம் எமது இருவிரல்களை உள்ளங்கைகளிலே மெல்ல 2 தடைவ தட்டி வணங்குதலே முறையாகும். இதனை தாளந்திரயம் என்பர். இதேபோன்று சண்டேஸ்வர மூர்த்தியை வலம்வந்து வணங்குதலும் முறையன்று. காரணம் நாம் வலம் வரும்போது எமது நிழல் மூர்த்தியின் மேல் விழாமல் இருப்பாதற்கேயாகும். இதற்காகவே சில ஆலயங்களில் சண்டேஸ்வர மூர்த்தியை அடியார்கள் வலம்வராத வண்ணம் அவரது சந்நிதி அமைக்கப்பட்டுள்ளதை யாம் அவதானிக்க முடிகின்றது.

மேலும் சிவனாரால் சண்டேஸ்வர பதம் இவருக்கு அளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதன் வண்ணம் சிவ பெருமான் தனக்கு நிவேதித்த உணவு, உடை, மாலை ஆகியவற்றை இவருக்கு வழங்கி சண்டேஸ்வர பதமும் அளித்தார் என்பது பெரியபுராண வரலாறு. எனவே பூசை முடிந்ததும் சிவனாருக்கு நிவேதித்த அத்தனையும் சண்டேஸ்வரருக்கு வழங்கிய பின்னரே அடியார்களுக்கு பிரசாதம் வழங்குதல் முறையாகும்.

"….. உண்ட கலமும் சூடுவனவும் சண்டேஸ்வரப் பதமும் தந்தோம் ….." என இறைவன் திருவாய் மலர்ந்தருளியதாக பெரியபுராணம் கூறுகின்றது. சிவானார் தனக்குச் சூடிய கொன்றை மாலையை சண்டேஸ்வர மூர்த்திக்கு சாற்றுவதாக சண்டேஸ்வர அனுக்கிரக மூர்த்தத்தை குறிக்கும் சிலை தமிழ்நாட்டிலே கங்கை கொண்ட சோழபுரத்திலே உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

நன்றி :- இந்து மதம் – விரதங்கள், விழாக்கள்

திருமதி திலகா வீரசிங்கம் அவர்களின் அன்புக் கணவர் 2008ஆம் ஆண்டு மார்கழி மாதம் காலமானதாக அறிகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றோம்.

உதவிச் செயலாளக இருந்து சங்க வளர்ச்சிக்கு உதவிய திருமதி திலகா வீரசிங்கம் அவர்கள் U.K சென்று ஐந்து வருடங்களுக்கு பின் வருகை தந்தமை எல்லோருக்கும் ஆறுதல் அளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கவனத்திற்கு,

**அதிகாலையில் நடத்தல்** :- சூரியோதயத்திற்கு முன் வெறுங்கால்களால் பாதணியில்லாமல் திறந்த வெளியல் நடக்க வேண்டும். பூமியில் ஆகர்ஷணா சக்தி கால் வழியாகச் சென்று உடலிலுள்ள நோய்களை போக்கும், உள்ளத்தில் உள்ள மிருக உணர்ச்சிகளையும் போக்கும்

**நார்ச்சத்துள்ள** காய்கறிகள் பழங்கள் போன்றவை அன்றாடம் உட்கொள்ள வேண்டும். அதன் மூலம் மலர்ச்சிக்கலைத் தடுக்கும். அதோடு மற்ற எல்லா வைட்டமின்களும் தாதுப் பொருட்களும் சரியான அளவு ஈடு செய்ய முடியும்.

**பிரம்ம முகூர்த்தம்** :- விடியற்காலை 4.00 மணிக்கு மேல் பிரம்ம முகூர்த்தம் தொடங்குகிறது மாணவர்கள் பாடங்களை அந்த நேரத்தில் படிக்கும் போது மிகவும் வல்லமை பெற்று திகழ்வார்கள். நல்ல சொற்களையும் நல்ல செயல்களையும் அப்போது நாம் செய்யப்பழக வேண்டும். வானமண்டலத்திலுள்ள தேவதைகள் "அப்படியே நடக்கட்டும்" "அப்படியே நடக்கட்டும்" என்று அப்போது வாழ்த்திய வண்ணமிருப்பார்கள். ஆகவே நல்ல சொற்களை நாம் சொல்லும் போது அப்படியே பலிதமாகும். அதன் காரணமாகவே நம்முடைய வாழ்க்கையில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டு மேன்மைகள் அடைவார்கள். காலத்தோடு செய்யப்படும் செயல் மிகுந்த ஆற்றலைத்தரும். ஆகவே பிரம்ம முகூர்த்த காலத்தை நன்கு பயன் படுத்திக் கொள்ளவும்.

**சிவ தரிசனம்** :- காலையில் சிவ தரிசனம் மேற்கொண்டால் வியாதிகள் நீங்கும் நண்பகலில் சிவ தரிசனம் செய்தால்செல்வம் பெருகும். சாயந்திரம் எனப்படும் சந்தியா காலத்தில் சிவ தரிசனம் செய்வது பாவங்களைப் போக்கும். அர்த்தசாமத்தில் கிடைக்கிற சிவ தரிசனம் முக்திப் பேறு அளிக்கிறது.

**ஐந்து லோகங்கள்** :- 1. தேவர்களுக்குச் சொந்தமானது சுவர்க்க லோகம். 2. அரக்கர்களுக்குச் சொந்தமானது பாதாள லோகம். 3. வைணவர்களுக்குச் சொந்தமானது வைகுண்டம். 4. சைவர்களுக்குச் சொந்தமானது சிவ லோகம். 5. பிரம்மாவிற்குச் சொந்தமானது சத்திய லோகம். சுவர்க்க லோகத்தில் இருப்பவர்கள் மீண்டும் மண்ணுலகத்திற்கு வந்தேயாக வேண்டும். இந்தப் பூலோகத்தில் இருந்து தான் சிவ லோகமோஇ வைகுண்டமோ செல்ல முடியும். ஆகவே பூலோகம் என்பது கர்மபூமி. இங்கிருப்பவர்கள் எதனை அடைய விரும்புகிறார்களோ அதனை நிச்சயமாக அடையலாம். அதனால் தான் "அரிது அரிது மானிராய் பிறப்பது அரிது". எனக் கூறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடியாத மூன்று

1. **வெற்றி பெறும் ஆற்றலில்லாதவன்** :- வெற்றி பெறும் ஆற்றலில்லாதவர்கள் போர் செய்து வெற்றி பெற முடியாது.

2. **திறமையில்லாதவன்** :- செல்வர் குடியில் பிறந்து அச்செல்வங்களைக் காப்பாற்ற முடியாது.

3. **சபைக்கு அஞ்சுகிறவன்** :- தான் கற்ற கல்வியை சிறப்புடன் யன்படுத்த முடியாது.

**கொடுக்கக்கூடாதவை** :- மாலை 6.00 மணிக்கு மேல் தீபம் ஏற்றிய பின் அந்த சமயத்தில் தருமம், கடன், தான்யம், பால், மோர், உப்பு, நவரெத்தினம், முட்டை போன்றவற்றைக் கொடுக்கக் கூடாது. விளக்கு ஏற்ற முன் கொடுக்கலாம்.

திருமதி. ஞானேஸ்வரி ஞானசேகரம்
இலக்கியக் குழு
பழைய மாணவர் சங்கம். கொழும்பு.

## யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு நன்கொடை

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி T. A. துரைசிங்கம் அவர்களும் இப்பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கத் தலைவி திருமதி சுபாங்கினி சுஜீவன் அவர்களும் பாடசாலை மாணவிகளுக்கு இலகுவாக நவின முறையில் கல்வி கற்பிப்பதற்கு ஏற்றவகையில் ஒரு Multimedia வாங்குவதற்கு உதவி செய்ய முடியுமா? என்று எங்கள் சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணரிடமும் உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளையிடமும் கேட்டதற்கு இணங்க அவர்களும் செயற்குழு கூட்டத்தில் கலந்து ஆலோசித்து கல்வி வளர்ச்சிக்கு உதவுதல் என்ற முறையில் செயற்குழு அங்கத்தவர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் Multimedia வாங்குவதற்கு யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு ரூபா 100,000/= நன்கொடையாக வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009ஆம் ஆண்டுக்கான மாகாண மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவிகள் விபரம்

1. மேசைப் பந்தாட்டம் - 19 வயதின் கீழ்ப்பிரிவு அணி - 1ஆம் இடம்

    1. கஸ்தூரி ஸ்ரீகாந்தராஜா
    2. கனுஸ்ரிகா ஜீவராஜா
    3. தனுசியா ஸ்ரீதரன்
    4. பிரதுஷா கந்தஞானி
    5. விதுசா வைகுந்தநாதன்
    6. கேமா சற்குணநாதன்

2. கரம் - 15 வயதின் கீழ்ப்பிரிவு அணி - 1ஆம் இடம்

    1. வோஜனா செல்வராஜா
    2. மேசி ஞானரூபி ஆனந்தராஜா
    3. கீர்த்திகா செல்வரத்தினம்
    4. கீர்த்திகா ஸ்ரீஸ்கந்தராஜா
    4. லாவண்யா லம்போதரஜோதி
    4. சர்மினி சிவராஜா

3. சதுரங்கம் - 19 வயதின் கீழ்ப்பிரிவு அணி - 2ஆம் இடம்

    1. சாரங்கி கனகலிங்கம்
    2. குலமகள் குலசிங்கம்
    3. தர்மேகா சிவராசா
    4. கார்த்திகா விஜயன்
    5. பிரவீனா விஜயகுமார்
    6. கஸ்தூரி ஸ்ரீஸ்காந்தராசா
    7. பிரதுஷா கந்தஞானி

# 2009ஆம் ஆண்டுக்கான மாவட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவிகள் விபரம்

1. பூப்பந்தாட்டப்போட்டி - 19 வயதின் கீழ்ப்பிரிவு - 2ஆம் இடம்

   1. கேசாயினி காலிங்கநடனம்
   2. வபிதா தங்கராசா
   3. நிலானி கணநாதன்
   4. நிவேதிகா சிவகுமாரன்
   5. பிரியங்கா குணம்
   6. சரவண்யா தெட்சணாமூர்த்தி

2. மேசைப் பந்தாட்டம் - 19 வயதின் கீழ்ப்பிரிவு அணி - 1ஆம் இடம்

   1. கஸ்தூரி ஸ்ரீகாந்தராஜா
   2. கனுஸ்ரிகா ஜீவராஜா
   3. தனுசியா ஸ்ரீதரன்
   4. பிரதுஷா கந்தஞானி
   5. விதுசா வைகுந்தநாதன்
   6. கேமா சற்குணநாதன்

3. கரம் - 15 வயதின் கீழ்ப்பிரிவு அணி - 1ஆம் இடம்

   1. வோஜனா செல்வராஜா
   2. மேசி ஞானரூபி ஆனந்தராஜா
   3. கீர்த்திகா செல்வரத்தினம்
   4. கீர்த்திகா ஸ்ரீஸ்கந்தராஜா
   4. லாவண்யா லம்போதரஜோதி
   4. சர்மினி சிவராஜா

4. சதுரங்கம் - 19 வயதின் கீழ்ப்பிரிவு அணி - 2ஆம் இடம்

   1. சாரங்கி கனகலிங்கம்
   2. குலமகள் குலசிங்கம்
   3. தர்மேகா சிவராசா
   4. கார்த்திகா விஜயன்
   5. பிரவீனா விஜயகுமார்
   6. கஸ்தூரி ஸ்ரீஸ்காந்தராசா
   7. பிரதுஷா க்ந்தஞானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட உள்ளத்திற்கு பத்துக் கட்டளைகள்

I. நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.

II. அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விடுங்கள். (Loose Talks)

III. எந்த விடயத்தையும் நாசூக்காகக் கையாளுங்கள் (Diplomacy) விட்டுக்கொடுங்கள். (Compromise)

IV. சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள். (Tolerance)

V. உங்கள் கருத்துக்களைச் சரியென வாதாடாதீர்கள். (Adamant Argument)

VI. குறுகிய மனப்பான்மையை விட்டெறியுங்கள். (Narrow Mindedness)

VII. உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)

VIII. மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)

IX. அளவுக்கதிகமாக தேவைக்கதிகமாக ஆசைப்படாதீர்கள். (Over Expectation)

X. புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

நன்றி – தியாக தீபம்

தந்தவர் – திருமதி. சாரதா மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு
# பதினாறாம் ஆண்டு (2009) அறிக்கை

(07-02-2009 தொடக்கம் 21-02-2010 வரையும்)

சங்கத்தின் 15வது பொதுக் கூட்டம் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது.

பதினாறாம் ஆண்டு செயற்குழு அங்கத்தவர்கள் பின்வருவோர் கடமையாற்றினார்கள்.

| | |
|---|---|
| போஷகர்கள் | - திருமதி உமாராணி குமாரசுவாமி<br>- திருமதி சரஸ்வதி ஜெயராஜா |
| தலைவி: | - திருமதி சிவகாமி அம்பலவாணர் |
| உபதலைவிகள்: | - செல்வி சற்சொரூபவதி நாதன்<br>- திருமதி அபிராமி கயிலாசபிள்ளை<br>- திருமதி தயாநிதி செல்வநாயகம் |
| பொதுச் செயலாளர்: | - திருமதி கௌரி ரமணா |
| உதவிச் செயலாளர்கள்: | - திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்<br>- திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தம் |
| பெருளாளர்: | - செல்வி சிவமலர் சுப்பிரமணியம் |
| உதவிப் பெருளாளர்: | - திருமதி பிரேமகுமாரி கலைநாதன் |
| நிர்வாகக் குழு: | - திருமதி விமலா மணிவாசகன்<br>- திருமதி பொன்மலர் கந்தசாமி<br>- திருமதி ருக்மணி அரசரத்தினம்<br>- திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்<br>- திருமதி கமலா கணபதிப்பிள்ளை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருமதி கலைச்செல்வி நிரஞ்சன்
- திருமதி நந்தினி மோகன்
- திருமதி மல்லிகாதேவி சரவணபவன்
- திருமதி இந்திராணி சோமசுந்தரம்
- திருமதி கௌரி தேவசேனாதிபதி
- திருமதி திலகா விஜயரத்தினம்
- திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்
- திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா
- திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம்
- திருமதி தயாநிதி உதயகுமார்
- திருமதி மனோன்மணி அருணாசலம்
- திருமதி சாரதாம்பாள் மனோகரன்
- திருமதி மகேஸ்வரி கணேசமூர்த்தி
- திருமதி புஷ்பகாந்தி சோதிலிங்கம்
- திருமதி சாவித்திரி உமாமகேஸ்வரன்

**கணக்குப் பரிசோதகர்:** கணேஷலிங்கம் அன்ட் கொம்பனி, சார்ட்டட் அக்கவுண்டன்ஸ், 16 B Schofield Place, கொழும்பு 3.

**யாழ் நாதம் ஆசிரியை:** திருமதி விமலா மணிவாசகன்

தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் நியுசிலாந்து செல்வதால் மீண்டும் மே மாதம் 5ஆம் திகதி விசேட பொதுக் கூட்டம் கூடி செயற்குழுவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டது. அதன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. போஷகர்களில் மாற்றம் இல்லை.

| | |
|---|---|
| தலைவி: | - செல்வி சற்சொரூபவதி நாதன் |
| உபதலைவிகள்: | - திருமதி அபிராமி கயிலாசபிள்ளை |
| | - திருமதி தயாநிதி செல்வநாயகம் |
| | - திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தம் |
| பொதுச் செயலாளர்: | - திருமதி கௌரி ரமணா |
| உதவிச் செயலாளர்கள்: | - திருமதி விமலா மணிவாசகன் |
| | - திருமதி கார்த்திகா பரமநாதன் |
| பொருளாளர்: | - செல்வி சிவமலர் சுப்பிரமணியம் |
| உதவிப் பொருளாளர்: | - திருமதி பிரேமகுமாரி கலைநாதன் |

நிர்வாகக் குழுவில் திருமதி விமலா மணிவாசகனுக்கு பதில் திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம் வருகின்றார். நிர்வாகக் குழுவில் வேறு மாற்றம் இல்லை.

**இவ் வருடத்தின் முக்கிய நிகழ்வுகள்**

மகளிர் தினக் கொண்டாட்டம்:- இத்தினத்தில் எமது சங்கத்தின் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். யாழ் நாதம் இதழ் 15 வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. எங்கள் பாடசாலைக்குத் தேவையான Photo Copy இயந்திரமும் Fax Machine உம் சண்முகம் நிதி வட்டியிலிருந்து வழங்கப்பட்டது.

03. சண்முகம் நிதி ரூபா 409,736.90 எங்கள் பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது.

04. கனிஷ்ட பாடசாலைக்கு ரூபா 100,000/= நன்கொடையாக வழங்கப்பட்டது. (விபரம் பக்கம் 27)

05. திருமதி சிவகாமி அம்பலவாணர் நியுசிலாந்து செல்வதனால் அவருக்கு பிரியாவிடை வைக்கப்பட்டது. (முன் உள் அட்டையில்)

06. 11.07.2009 இல் உளவள ஆலோசகர் திருமதி கோகிலா மகேந்திரன் சமூக சேவையைப் பற்றி உரையாற்றினார்.

07. எங்கள் கல்லூரியின் 2008ஆம் ஆண்டுச் சிறந்த மாணவியான செல்வி மோகனரஞ்சனி ரவீந்திரனுக்கு ரூபா 27,400/= பெறுமதியான பொன்விருது வழங்கப்பட்டது. (படம் பின் அட்டையில்)

08. எங்கள் சங்கம் ஸ்தாபித்த இணையத்தளம் (விபரம் பக்கம் 20)

09. யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி (விபரம் பக்கம் 18)

10. யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி (விபரம் பக்கம் 23)

11. ஒன்று கூடல் நிகழ்வு (படம் முன், பின் அட்டையில்)

சங்கத்தின் நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்கள்.

| திகதி | இடம் | வருகை |
|---|---|---|
| 27/03/09 | சரஸ்வதி மண்டபம், லொரன்ஸ் வீதி,கொழும்பு 4 | 07 |
| 18/04/09 | சரஸ்வதி மண்டபம், லொரன்ஸ் வீதி,கொழும்பு 4 | 09 |
| 02/05/09 | சரஸ்வதி மண்டபம், லொரன்ஸ் வீதி,கொழும்பு 4 | 12 |
| 13/06/09 | சரஸ்வதி மண்டபம், லொரன்ஸ் வீதி,கொழும்பு 4 | 07 |
| 11/06/09 | சரஸ்வதி மண்டபம், லொரன்ஸ் வீதி,கொழும்பு 4 | 10 |
| 10/08/09 | சரஸ்வதி மண்டபம், லொரன்ஸ் வீதி,கொழும்பு 4 | 08 |
| 10/10/09 | சரஸ்வதி மண்டபம், லொரன்ஸ் வீதி,கொழும்பு 4 | 09 |
| 11/11/09 | சரஸ்வதி மண்டபம், லொரன்ஸ் வீதி,கொழும்பு 4 | 08. |
| 30/01/10 | சரஸ்வதி மண்டபம், லொரன்ஸ் வீதி,கொழும்பு 4 | 09 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம்

இந்த கொண்டாட்டம் பிரதம அதிதி திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களின் தலைமையில் சரஸ்வதி மண்டபத்தில் மார்ச் மாதம் 8ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது.

இவ்விழாவில் எமது கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவியும் எமது சங்கத்தின் அங்கத்தவரும் தலைவியுமான திருமதி சிவகாமி அம்பலவாணர் கௌரவிக்கப்பட்டார்கள்.

இவர் எமது சங்கத்தில் செயலாளராகவும் பொருளாளராகவும் தலைவியாகவும் மாறிமாறி கடமையாற்றினார். இவர் எமது சங்கத்தின் வளர்ச்சிக்கும் கல்லூரியின் முன்னேற்றத்துக்குமாக அரும்பாடுபட்டார். இவரின் செயற்பாடுகளுக்கு இவரின் கணவர் பக்கபலமாக விளங்கினார். அத்துடன் குடும்ப அங்கத்தவர்களும் உறுதுணையாக இருந்தார்கள்.

எமது சங்கத்தின் செயற்பாடுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற ஆவலுடன் ஒரு சஞ்சிகை வெளிவர வேண்டும் என்பதை செயற்குழுவில் முன்மொழிந்தார். செயற்குழு ஏகமனதாக அதை ஏற்றுக் கொண்டபடியால் "யாழ் நாதம்" என்ற சஞ்சிகை மலர்ந்தது. யாழ் நாதம் இதழ் 1 வெளியீடு பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது.

"யாழ் நாதம்" இதழின் ஆசிரியராக 13 வருடங்கள் கடமையாற்றினார். பல இடையூறுகள் மத்தியில் மிகவும் திறம்பட செயல் புரிந்து வருடம் ஒரு மலராக மலர்வதற்கு பெரும் பங்காற்றினார்.

எமது சங்கத்துக்கு ஒரு இணையத்தளம் இருக்க வேண்டும் என்பது இவரின் பெரும் விருப்பமாக இருந்தது. அதனால் இணையத்தளம் ஸ்தாபிப்பதற்கு பெரும் முயற்சி எடுத்து அதில் வெற்றியும் அடைந்து இணையத்தளம் ஸ்தாபித்து அதனை செயற்படுத்தியும் வந்தார்.

இவர் Bamber & Bruce நிறுவனத்தில் பிரதம இரசாயன நுண்உயிரியல் ஆய்வாளர் ஆக 34 வருடங்கள் கடமையாற்றினார். மற்றும் இலங்கை பரிசோதனை ஆய்வுகூடங்களின் சங்கத் தலைவியாகவும் விளங்கினார்.

இவரின் தோழிகள், உறவினர், சங்க அங்கத்தவர்கள் மற்றும் இவர் அங்கம் வகிக்கும் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் இவ்விழாவுக்கு வருகை தந்திருந்தார்கள்.

இவரின் சேவையினை பாராட்டும் முகமாக இவருக்கு "தொழில் நுட்ப வித்தகி" என்னும் பட்டத்தினை எமது சங்கம் இவ்விழாவின் போது வழங்கியது. (படங்கள் பின் உள் அட்டையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிகழ்வின் போது வருடாந்த சஞ்சிகையாகிய யாழ் நாதம் இதழ் 15 வெளியிடப்பட்டது. சஞ்சிகை ஆசிரியரான திருமதி விமலா மணிவாசகன் இதன் முதல் பிரதியை பிரதம அதிதி திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களுக்கு வழங்கி வெளியிட்டு வைத்தார்.

மேலும் திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களை கௌரவிக்கும் பொருட்டு எமது சங்கத்தினர் இவ்வாண்டு "தொழில் நுட்ப வித்தகி சிவகாமி" என்னும் தலைப்பில் சேவை நலன் பாராட்டு மலர் 2009 என்னும் சஞ்சிகையை யாழ் நாதம் 16 இதழின் இணைப்பிதழாக வெளியிடுகின்றோம்.

# பிரியாவிடை

சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் நியுசிலாந்து செல்வதனால் அவருக்கு பிரியாவிடை வைப்பதற்கு சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. இலக்கம் 24 டீல்பிளேஸ் (ஏ) யில் உள்ள உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் இல்லத்தில் 24.04.2009இல் மாலை 4.00 மணி தொடக்கம் 5.30 மணி வரை இந்த வைபவம் நடைபெற்றது.

புது அங்கத்தவராக வருகை தந்த திருமதி கார்த்திகா பரமநாதன் அவருக்கும் மற்றவர்களுக்கும் இடையில் அறிமுகம் நடைபெற்றது. உதவிச் செயலாளராக இருந்து U.K சென்று இங்கு வந்தவிடத்து வருகை தந்த திருமதி திலகா வீரசிங்கத்தை 5 வருடங்களின் பின் கண்டது எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சியளித்தது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் கலந்துரையாடினார்கள். சிற்றுண்டி தேநீர் விருந்துடன் இந்த நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

# ஒன்று கூடல் நிகழ்வு

ஒன்று கூடல் நிகழ்வு சங்க அங்கத்தவரால் ஒழுங்கு செய்யப்பட்டு 20.12.2009இல் Curry Leaves இல் முற்பகல் 11.30 மணி தொடக்கம் 2.00 மணி நடை பெற்றது.

இந்த நிகழ்வுக்கு சங்க அங்கத்தவர்களும் அவர்களின் உறவினர்களும் வெளி நாடு சென்றிருந்து இங்கு வந்திருந்த சங்க உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தார்கள். கலந்துரையாடலுடனும் மதிய போசனத்துடனும் இந்த நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

## சங்க அங்கத்துவம்

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில் (வ. கீ. பி. பா. ப. மா. சம்) ஒரு அங்கத்துவ சங்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து இருக்கிறது. எங்கள் சங்கத்தை இந்த ஆண்டு (2009) பின்வருவோர் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்.

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி சிவகாமி அம்பலவாணர், செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி விமலா மணிவாசகன், செல்வி சிவமலர் சுப்பிரமணியம்

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை சம்மேளனத்தின் பொருளாளராகவும் திருமதி சிவகாமி அம்பலவாணர் நியுசிலாந்து செல்லும் வரை இணைச் செயலாளராகவும் செல்வி சற்சொரூபவதி நாதன் எங்கள் கல்லூரிப் பிரதிநிதியாகவும் கடமையாற்றினார்கள்.

எமது சங்கக் கூட்டங்களையும் ஏனைய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை செய்து தரும் திரு. சச்சிதானந்தனுக்கும் இதை ஒழுங்கு செய்து தந்த திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சங்க அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், உபதலைவிகளுக்கும், பொருளாளர் செல்வி சிவமலர் சுப்பிரமணியம், நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் சங்கமும் கல்லூரியும் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் முன்னேற கல்லூரி வளாகத்திலுள்ள நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் அருள்பாலிப்பாராக.

*திருமதி கௌரி ரமணா*
*கௌரவ செயலாளர்*
*21.02.2010*

இளமையில் கல்வி சிலையில் எழுத்து

கற்றோருக்கு சென்றவிடம் எல்லாம் சிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மகளிர் தினம் 2009-03-08 அன்று திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களைக் கௌரவித்த நிகழ்வின் நிழல்கள் (குறிப்பு - பக்கம் 34)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2008 ஆம் ஆண்டுச் சிறந்த மாணவி
செல்வி மோகனரஞ்சனி ரவீந்திரன் கல்லூரி
அதிபர் திருமதி வேதநாயகி
பேரின்பநாதனிடம் இருந்து
பொன்விருதைப் பெறுகின்றார்
(குறிப்பு - பக்கம் 33)

## 2009-12-20 அன்று நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வின் நிழல்கள்

(குறிப்பு - பக்கம் 35)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org